செ.வெ.எண்:53 நாள்:27.02.2018

# தோட்டக்கலை பயிர்களுக்கு

# பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம்

பயிர் உற்பத்தி இழப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாத்தல், உணவு பாதுகாப்பை உறுதி செய்தல், மாற்றுப்பயிர் சாகுபடியை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களோடு "பிரதமமந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம்" தமிழகத்தில் **29** மாவட்டங்களில் செயல்டுத்தப்பட்டு வருகிறன்றது.

**2.**இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான பயிர் இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு விரைந்து வழங்குவதோடு விதைப்பு பொய்த்தாலும், நடவு செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலும், அறுவடைக்குப்பிந்திய இழப்பு ஏற்பட்டாலும், பகுதிசார்ந்த இயற்கை இடர்பாடுகளான புயல், ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பருவம் தவறிய மழை, வயல்களில் வெள்ளநீர் தேக்கம் மற்றும் அடைபருவகால இடர்பாடுகளால் இழப்புகள் ஏற்பட்டாலும் இழப்பீடு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேளாண் பயிர்களைப் போல, தோட்டக்கலை பயிர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்களில், அறிவிக்கை செய்யப்பட்ட தோட்டக்கலைபயிர்களான வாழை, மரவள்ளி, மற்றும், வெங்காயம் ஆகியவற்றிற்கு வருவாய் கிராம அளவில் காப்பீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**3.** இத்திட்டத்தினகீழ் காப்பீடு செய்யும் மொத்த காப்பீட்டுத் தொகையில் விவசாயிகள் **5%** மட்டுமே செலுத்தினால்போதும், மீதமுள்ள காப்பீட்டுத் தொகையை மத்திய மாநில அரசுகளே ஏற்கின்றன. இத்திட்டத்தின் கீழ் வாழை, மரவள்ளி மற்றும் வெங்காயம் ஆகிய பயிர்களுக்குக் காப்பீடு செய்ய கடைசி நாள் **28.02.2018** ஆகும். விவசாயிகள் நடப்பு ரபி பருவத்தில் பயிர் செய்த தங்கள் வாழை உள்ளிட்ட மேற்கண்ட பயிர்களுக்குக் காப்பீடு செய்ய அதற்குரிய பிரிமியத் தொகை, அடங்கல், ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்கு விவரம் ஆகியவற்றுடன் அருகிலுள்ள தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கிகள், தனியார், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்களை அணுகி விரைந்து காப்பீடு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**4.**கரூர் மாவட்ட விவசாயிகள் தேர்வு செய்யட்டுள்ள கிராமங்களில் தேர்வு செய்யப்பட்ட பயிர்களுக்கு வாழை, மரவள்ளி மற்றும் வெங்காயம் போன்ற பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ) கரூர் அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.